**Subscription.**

**Inland: Rs. 50/- year**

**For Advertisement**

**Apply to:**

**The Manager,**

**'The Morning Star,'**

**182, First Cross Street**

**JAFFNA.**

# THE MORNING STAR

**Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No. Q / J / 104 / News / 89**

**Established : 1841 : A Christian Weekly: Published Every Friday**

**Vol. 149 Jaffna, Friday, 20 OCTOBER 1989 No. 42**

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

**News and Articles in Tamil and English. Please send them to**

**THE EDITOR,**

**' The Morning Star,'**

**182, First Cross Street,**

**JAFFNA.**


## J. D. C. S. I. Christian Family Festival.

**venue:** C S I - Manipay.
**Date:** 28. 10. 1989 Saturday.
**Time:** From 8.30 A. M. till evening.

**Programme:** Morning.

- Special Service.
- Bible Quiz and
- Discussions.
- Entertainments.

**Evening:**

- Awarding of Certificates to the students and opening of the exhibition and sales of the small Industries by the Rt. Rev. D. J. Ambalavanar.
- Tea will be served.

All are cordially invited.

Mrs. A. R. Thambiappah,
Women's Fellowship.

## The need of the hour: Preventive or curative health care?

It is believed that all human beings have personal dignity and worth and that health care is as much a right as all other social, civil and political rights that a free society must guarentee its citizens. The health care system as it exists in this country today does not meet all the needs of the people it seeks to serve. The greatest and the most obvious inequity in the health care available today is that it is cure oriented and is available only to those who can afford it.

The consumers of this health care system or the patients are still primarily disease cure oriented. Not many people will easily part with hard earned money if they are not sick. It is not much fun to hand a doctor his fee to hear what you already know - that you are in perfect health. The doctors on their part feel that illness is more "glamorous" than wellness and therefore prefer to work in places where sophisticated equipment backed by the latest techaology is available to perform mere miracles. To the doctors of today prevention of a disease by health education, health planning etc is not as dramatic as for example as open heart surgery (which could have been prevented if the Rheumatic heart disease wss diagnosed and treated early). Unfortunately the fee for service system that we have tends to discourage health maintenance and disease prevention.

The latest W. H. O circular states that nearly 7 million children in the developing world die of communicable diseases that could have been prevented by immunisation. It further states ignorance and inavailability of vaccines close to the children's homes as the major causes for this catastrophe. In their recommendations they have advised taking health care to the grass root level and involving the villagers by giving them responsibilities. In other words Primary health care is the maintenance of health by the people in ones own household. If the public is to be involved, they should percieve a need and they should be convinced that will be better off with their participation.

The present system of government hospitals and base clinics which supposedly cater to the economically backwared people has proved woefully inadequate as evidenced by the lack of drugs, absence of supervision by health inspectors and closed doors if not long queues at these clinics. The preventive aspect has completely been neglected as those appointed for such purposes do not benefit by such services. Thus the only alternative to take health care to the masses is to select people, preferably women who will continue to live in the same village and train them as health workers. A health worker could be in charge of a population of around 500 and her main duties would be health education, dressing wounds (that progress later to gangrene) and keeping records of births, deaths etc. From this basis step the health pyramid can be built up whereby the hospital becomes a tertiary referal hospital where only the serious patients are treated. In this manner infection which start small can be controlled before they become life threatening and debilitating diseases like T. B, Leprosy can be diagnosed early and treated well before they cause disability. In the developed nations there is hardly a case of T. B or Rheumatic heart disease necessitating open heart surgery, because of the intense health education and early diagnosis.

Developing countries that have adopted this approach are already reaping the benefits of an initially frustrating endeavour. The birth rate, infant mortality rate has plummeted down in many places due to the intensive health education and mass immunisation drives. Ii is a welcome change that the government recently inaugurated a measles vaccination drive but more concentrated effort is necessary if we are to take health care to the masses. Curing a disease without attempting to understand the epidemiological causes for the presenc of it is not the need of the hour.

(to be continued.)

DR. PRIASHANTA VISVALINGAM.
GREEN MEMORIAL HOSPITAL.

## Ultra Sound Scanner at Green Hospital.

A new Ultra Sound Scanner has been installed at the Green Hospital Manipay. Dr. Chandra Ambalavanar the Obstetrician and Gynaecologist at the Hospital spent two months in England in July - August following a course in the use of the Scanner.

After a brief prayer meeting on Thursday the 12th of October at 1-00 p. m. the Bishop Switched on the gadget. Green Hospital has also installed an electrical Incubator at the Maternity Department.

## French - Speaking Indian Ocean Islands To Host International Tamil Conferences.

Two French speaking countries off the coast of Madagascar in the Indian Ocean Reunion and Mauritius will host two International Tamil Conference in November and December this year.

The Fifth World Tamil Cultural Conference will be held in the Reunion Islands during November and the Seventh International Tamil Reserch Conference will take place in December.

This is the second time, the two international Tamil Conferences are taking place in Countries where French is Spoken. The Third International Tamil Reserch Conference was held in the late Sixties in Paris Capital City of France whereas the Third World Tamil Cultural Conference took place in Mauritius in early 1983.

The international Tamil Community awaits with great hopes and expectations that the forthcoming two international Tamil Conferences would pave the way for international Tamil solidarity while at the same time reintroducing the Tamil language to those Tamils living in the islands of Reunion and Mauritius who have forgotten their mother longue and become French Speaking Tamils.

Arrangements are being made, it is understood, for delegates from Sri Lanka to participate in these two international Tamil Conference.

## Statement On The Current Situation In The Country By The National Christian Council of Sri Lanka

The National Christian Council is grievously distressed and alarmed at the continously and rapidly sharpening crisis of violence throughout the country.

This Council has consistently held a vision of Sri Lanka which is inspired and informed by unshakeable conviction of the primacy, under God, of love in human relationships.

Genuine Democracy, we firmly hold, is the dispensation most conducive to the attainment of that vision, for Democracy is committed to justice and peace which abhors all discrimination between citizens. It is tenacious of the Common Good and decries promotion of advantage or profit and the fostering of the greed for power of any individual or group or party to the detriment of that good.

The specific causea of the current epidemic of violence are to be found primarily in the unresolved political and ethnic issues, economic marginalisation of the general mass of the people, and the alienation of a significant section of youth in our land.

The ethnic tensions, arise from inveterate discrimination against the Tamils, and the fears of the Sinhala majority.

We earnestly recommend that the State fully implement the devolution programme without delay and in the spirit of the objective of a proportionate sharing of power and resources among all communities: and we strongly urge the leadership of

(see page 4)

# உதய தாரகை

**UTHAYATHARAKAI**

**Estd. 1841.**

கிறிஸ்தவ வார இதழ். வெள்ளிதோறும் வெளிவருவது.
நீதி ஜனத்தை உயர்த்தும்: பாவம் எந்தக்குலத்துக்கும் இழிவாம்

மலர் 149 20 - 10 - 1989 [இதழ் 42


## சிந்தனை 34.

### அன்பு

### வேதப்பகுதி: ஓசியா.3.

கிடைக்க வேண்டிய ஒன்று கிடைக்காதவிடத்து வேதனையின் வெப்பம் அதிகரிப்பது இயல்பு. இவ்வுண்மை கண்ட பாவலன், கன்னியாயின் நீருற்றுப்பற்றிப் பாடும்போது,

“கவிபாடிப் பரிசு பெறுன் மனம் போல ஒன்று, காதலனைப்பிரிந்தவன் தம் மனம் போல ஒன்று” என்று பாடுகின்ருர்.

ஓசியாவுடைய புத்தகம், காதலியின் பிரிவுத்துபரை வெளிப்படுத்தும் காதலனின் உள்ளத்து வெப்பத்தை உலகறியச் செய்வதாக அமைகின்றது. அன்புக்குரிய ஒன்றை, அன்பு பிரித்து நிற்பது வேதனையான ஒரு நிலைப்பாடு

வகுப்பறையிலே ஒரு ஆசிரியர், மாணவர்களிடம், அம்மாவைப்பற்றி எழுதும்படி பணித்தார். மாணவர்கள், பக்கம் பக்கமாக எழுதினர்கள். ஒரு மாணவன், இரண்டே இரண்டு வரிகளை எழுதி விட்டு உட்கார்ந்து விட்டான். ஆசிரியர், குறிப்பிட்ட மாணவனிடம்,எழுதியதைப் படிக்கும்படி பணித்தார். “அம்மாவை உடையவன், அம்மாவின் அன்பை அறிய மாட்டான் அம்மாவை இழந்தவன், அம்மாவின் அன்பைத்தேடி அலைகிருன்” என்று படித்துவிட்டு உட்கார்ந்தான். அம்மாணவனின் இந்தப் பொன்மொழி; அம்மாணவனின் உள்ளக்குமுறல். இவன்,தாயை இழந்த ஒரு சிறுவன்.

தனது அன்பின் துணையைப்பிரிந்து நின்ற ஓசியாவும், அன்பை மறுபடியும் அடைய வேண்டும் என்று துடியாய்த் துடிக்கின்ருன். இத்துடிப்பு நிலை, இவனுடைய இளகிய மனத்திலிருந்து எழுந்த அன்பின் நிலைப்பாடே!

இந்நிலைப்பாட்டை இறைவன் பயன்படுத்தித் தனதுநிலைப்பாட்டை உலகம் அறியும் படியும், தனது அன்பும், அன்புக்குரியவர்களைப் பிரிந்து வாழும் இயல்பு அற்றது என்றும் எண்பிக்கின்ருர். இவ்வுண்மையைப் பிரதிபலித்து நிற்பதுதான் ஓசியா மூன்றும் அதிகாரம்.

உபாகமம் 22:22-30 வசனங்கள், பல சட்ட விதிகளைத் தருகின்றன. இச்சட்ட விதிகளையெல்லாம்,கடந்து சென்று, அன்பு, செயல்படுவதை மூன்ரும் அதிகாரம் நிரூபிக்கின்றது. இச்சட்டங்கள் என்றுமே சரித்திரத்தை மாற்றும் இயல்புடையவைகள் அல்ல. அன்பு ஒன்றுதான் சரித்திரத்தை மாற்றும் இயல்புடையது.

இதற்குச் சாட்சியாக என்றும் இருப்பது, சிலுவை சுற்றுக்கந்த அன்பு வழி ஒன்றுதான். இவ்வழி இறையியலை உலகரியலில் நடைமுறைப்படுத்தும் நல்வழி.

விபச்சாரத்தைச் சட்ட விதிகளால் அகற்றுவது ஆக்கப்பணியாகாது. மாருக விபச்சாரியை அன்புள்ளத்தால் ஒருவன் திருமணம் செய்து கொள்வதால், அச்செயல் அற்றே போகும் என்பது அமுதவாக்கு. இதற்குச் செயல்வடிவம் கருவதாக ஓசியாவும் இறைவனும் செயல்படுவதை, ஓசியா மூன்ரும் அதிகாரம் உறுதி செய்கின்றது.

ஓசியாவிடம் செயற்பட்ட இறை வரலாறு, நம்மிடையும் செயல்படவேண்டும் என்பதே இறைத்திட்டம். அன்பு என்றசொல்லும் உறவு என்ற சொல்லும் இணைந்து செயல்பட்டால், ஆக்கங்கள் மலரும்-அழிவுகள் ஒழியும் - ஏக்கங்கள் இல்லாதே போகும்-இன்பம் பெருகும்.

மனிதன்,இறைவனுக்குவிரோதமாக இழைக்கும்தவறுகளை இறைவன் மன்னித்து மறந்து மனிதனோடு இணைவதானல், மனிதன் மனிதனுக்கு இழைக்கும் தவறுகளை ஏன் மன்னிக்கக்கூடாது. காரணம், சுடர்விட்டெரிய வேண்டிய அன்பு இல்லாததே!

ஜெபம்:

வாழ்வு தர வாழ்வாக வந்த
மீட்பரே,
தாழ்விடத்தில் நம்மைச் சந்தித்த
மீட்பரே,
நாளெல்லாம் நான் பிறரை
மன்னிக்க வரம் தாரும்,
பாழும் இருள் அகற்றி உன்
அன்பை,
உள்ளத்தே தாரும் உன் பணி
தொடர.

துறையூரான்.
வண. ஆ. வே. யேசுதாசன்,
காரைநகர்.

## சிறுவர் பகுதி:



### தாய் சொல்லைத் தட்டாத 19 வயது மாணவன்.

இந்த உளவியல் விசித்திரத்தை நம்பினல் நம்புங்கள்!

கனடாவைச் சேர்ந்த டொம் என்ற இளைஞன் வயது 19.

பாடசாலைக்குச் சென்று வந்தான் அவன். தொற்று நோய் பிடித்து மாண்டு விடுவேனே என்ற மனப் பயம் அவனைப் பீடித்தது.

தினமும் ஐம்பது தரத்திற்கு மேல் அவன் தனது கைகளைக் கழுவி வந்தான். அடிக்கடி குளித்து வந்தான். மனப்பயம்' அதிகரித்து மனக்கோளாறை அவனுக்கு ஏற்படுத்தியது. இதனல் பாடசாலையில் இருந்து விலக்கப்பட்டான்.

அவன் ஒரு நாள் தாயாரிடம் முறையிட்டான் “அம்மா, இனி நான் வாழ்ந்து பிரயோசனமில்லை” இப்படி அவன் தாயாரிடம் சொன்ஞன்.

“போ நீயே உன்னைச் சுட்டுக் கொல்” - இப்படி அம்மா பதிலளித்தாள்

22 கலிபர் ரைபிளை எடுத்துத் தன்னைத்தானே சுட்டுக் கொண்டான் டொம். குண்டு ஒன்று அவனின் தலையில் இடது முன்பக்க மூளைக்குள் சென்று தங்கி விட்டது.

அதிர்ஷ்ட வசமாக டொம் உயிர் தப்பிவிட்டான் ஆனல் குண்டுதாக்கியதால் டொம்முக்கு பெரிய பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை.

ஆனல் டொம்முக்கு இருந்து வந்த மனக்கோளாறு நீங்கி விட்டது. தினமும் 50 தரம் கைகழுவி, குளிக்கும் பழக்கத்தை அவன் கைவிட்டான்.

தன்னைத்தானே தலையில் சுட்டதன் மூலம் மனக்கோளாறை நீக்குவற்குத் தேவையான நரம்புச் சத்திர சிகிச்சையை டொம் மேற்கொண்டான் என்று உளவியல் நிபுணர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

துப்பாக்கிக்குண்டு தாக்கிய மூளைப் பகுதி தான் அவனுக்கு மனக்கோளாறை ஏற்படுத்தியதாம்.

இப்போது டொம் கல்லூரிப் படிப்பைத் தொடருகின்ருன். சாதாரண மனிதனுக வாழத் தொடங்கி விட்டான்.

இத்தகவல், பிரிட்டிஷ் உளவியல் சஞ்சிகையில் வெளியிடப்பட்டுள்ளது.

ஜெயசீலன்.

## மது மதி.

மனம் ஒரு குரங்கு — அது
தினம் பல தாவும்
ஆசைகள் கோடி
அதில் உருவாகும்
ஆவது கண்டு
அவஸ்தையில் வாழும்
பாதையை மாற்ற
போதையை நாடும்
போதையில் நாளும்
போதனை செய்யும்
வீதியில் மக்கள் — இது
விதியெனச் சொல்லி
வாடிக்கையாகவே
வேடிக்கை பார்ப்பர்
காலமும் மாறவே
கோலமும் மாறும்
சொத்தும் போகவே — உற்ற
சொந்தமும் போகும்
மதியும் போகும் —நிம்
மதியும் போகும்
நோயும் சேரும் — உடல்
பாயில் வீழும்
விதி அவன் வாழ்க்கையில்
சதி பல செய்ததோ — இல்லை
மதுவின் வேலைதான்
மதி என்னுயிற்று
விதியை நோவதேன்.

## செய்திச் சரங்கள்:

### ★ லண்டன் நகரில் ஒன்று கூடிய உடுவில் மகளிர் கல்லூரிப் பழைய மாணவர்.

உடுவில் மகளிர் கல்லூரிப் பழைய மாணவர் ஒன்றுகூடி, சிறீலங்காவுக்கு வெளியே தமது சங்கத்தை அமைத்த நிகழ்ச்சி வரலாறு படைத்த நிகழ்ச்சியாகும். பிரிட்டனில், தமது பழைய மாணவர் சங்கத்தை நிலைநாட்டும் முகமாக, லண்டனிலுள்ள 'புற்னி' தேவாலய மண்டபத்தில், ஐம்பதுக்கும் மேற்பட்ட பழைய மாணவ மாணவிகள் (உடுவில் மகளிர் கல்லூரியின்) செப்ரெம்பர் 9ம் தேதி (09 09-1989) இந்த ஒன்றுகூடல் நிகழ்வை ஏற்படுத்தினர்.

இந்த ஒன்றுகூடலில் அவர்கள் வெளிக்காட்டிய பேரார்வம். வரப்போகும் ஆண்டுகளில், அவர்களின் துரித நடவடிக்கை எப்படி வளரும் என்பதையே முன்னறிவித்தது என்ருலக்கூட மிகையாகாது. இந்தப் பழைய மாணவர் சங்கம் பலமாக வளர்ந்து, தனது பழைய கல்லூரித் தாய்க்குக் குறிப்பிடத்தக்க சேவையும் உதவியும் புரியும் என்ற நம்பிக்கை, அங்கு வந்தோரின் உள்ளங்களில் மொட்டு விரித்தது.

கடந்த 'மே' திங்களில், தனது உலாவை மேற்கொண்டு லண்டனில் சொற்ப காலந் தங்கியிருந்த செல்வி செல்வி செல்லையா அவர்கள், இச்சங்கம் அங்கு அமைவதற்கான ஊக்குவிப்பைத் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத் தக்கது.

இந்த ஒன்றுகூடலை மிகச் சிறந்த முறையில் ஒழுங்கு செய்து, அனைவரையும் வரவழைத்த பெருமைக்குரியவர் திருமதி பியூலா பிறேமருஜா (Fitch) அவர்கள். பற்பல இடையூறுகளுக்கிடையே, தனது விடா முயற்சியைப் பயன்படுத்தி, இதனை நிறைவேறச் செய்தவர் அந்த அம்மையார்தான்.

கனடாவில் உள்ள 'வன்கூவர் என்ற இடத்திற்குச் சென்று அவரோடு அவரின் குடும்பத்தினரும் வெகு விரைவிலே குடியேறத்தீர்மானித்துள்ளனர். இத்தகைய தீர்மானத்தால், திருமதி பியூலா பிறேமருஜாவின் சேவையை இழந்து, இச்சங்கம் வேதனைப்படும் என்பது மறக்க முடியாத ஓர் உண்மை.

சங்கத்தின் உத்தியோகத்தவரின் பட்டியல்:-

தலைமை: திருமதி கண்மலர் இவன்ஸ் (நல்லையா)
துணைத்தலைமை: திருமதி ராசு சற்குணநாயம் (சுப்பிறமணியம்)
கௌ. செயலர்: செல்வி நந்தினி ஜீவறட்ணம்.
கௌ. பொருளர்: திரு. மோகன் சொலமன்.
கௌ. துணைச்செயலர்- துணைப் பொருளர்: திருமதி மாலதி கிறிஷ்ண ருஜா(ஜோசப்)

கூட்டத்தின் தொடர் நிகழ்வாக இடங்கொண்ட சிற்றுண்டி விருந்தை முடித்து மகிழ்வெய்திய அனைவரும், தமது கல்லூரிக் கீதத்தை, மிகுந்த உற்சாகத்தோடு இசைத்தனர்.

### ● கின்னஸ் புத்தகச் சாதனை.

எண்பத்தி ஒன்று ஆண்டுகளுக்குப்பின் ஒரு சகோதரனையும், சகோதரியையும் மறுபடியும் சந்திக்க வைத்து மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைக்கவைத்து, உலக சாதனை புரிந்துள்ளது, உலக இரட்சணிய சேனைத் தலைமையகத்தின், காணமற் போனவர்களைக் கண்டுபிடிக்கும் இலாகா

வில்லியம், எலிசி என்ற இருவரும் அண்ணனும் தங்கையுமாவர்.

1907 ஆம் வருடம் இவர்களது தாய் மரித்த போது வில்லியத்திற்கு நாலரை வயதும், எலிசிக்கு இரண்டு வயதுமாகும். எலிசி, வேறு யாராலாவது வளர்க்கப்பட வேண்டும் என எண்ணிய அவர்களது தந்தை, தங்களது உறவினர் ஒருவரிடம் எலிசியைக் கொடுத்து விட்டார். அந்த நாளிலிருந்து எலிசிக்கும்,வில்லியத்திற்கும் எந்தவித தொடர்பும் இல்லாதிருந்தது.

1987 ஆம் வருடம் எலிசியின் கணவர் இறந்த போது, தான் மிகக் குறைவாகவே அறிந்திருந்த தனது சகோதரனையும், குடும்பத்தையும் பற்றி அதிகம் அறிய ஆவல் கொண்டாள். அவர்கள் வாழ்ந்து வந்த பட்டணத்தில் பிரசுரமான ஒரு பத்திரிகையின் மூலம் இரட்சணிய சேனையைப் பற்றி அதிகம் அறிந்த எலிசியின் மகன் பிரயன் ஆஸ்போர்டு, அவர்களைப் பற்றியும், அவர்களது ஆசையையும் இரட்சணிய சேனைத் தலைமையகத்திற்கு எழுதினன்.

ஹாரி, வில்லியம், எலிசி ஆகியோரின் தந்தை ஒரு இராணுவ வீரர். அவர் எகிப்தில் பணிபுரிந்த போதுதான் இம்மூன்று குழந்தைகளும் பிறந்துள்ளனர். வில்லியத்தின் இரட்டையான இன்னொரு குழந்தை சிறுபருவத்திலேயே இறந்து போனதாகக் கருதப்படுகிறது. எகிப்திலிருந்து இங்கிலாந்திற்குத் திரும்பி வந்தபோது ஹெர்ட்போர்ஷயர் என்னுமிடத்தில் வாழ்ந்து வந்தார்கள். இவ்விதத் தகவல்களே இரட்சணிய சேனைத் தலைமையகத்திற்கு எலிசியின் மகன் கொடுத்திருந்தார்.

சேனையின், காணமற் போனவர்களைக் கண்டுபிடிக்கும் இலாகாவின் தலைவர் மேஜர் காலின் பெயர்களைப் இந்தத்தகவல்களைவைத்துக்கொண்டு இவர்களைக்கண்டு பிடிப்பதில் மிகத் தீவிரமாக ஈடுபட்டார். சில நாட்

தாரகை ஒளி:-

**இரகசிய வெகுமதி கோபந் தணிக்கும்;**
**மடிப்பரி தானம் கடுங் கோபம் ஆற்றும்**

— நீதிமொழிகள். 21 : 14 —

## தென் இந்தியத் திருச்சபை - யாழ் அத்தியட்சாதீனம் பெண்கள் ஐக்கியம்

## சிறு கைத்தொழில் பயிற்சி நிலையம், மானிப்பாய்.

மேற்குறிப்பிட்ட பயிற்சி 1989 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 15 ஆம் திகதி ஆரம்பமாகும். ஆறு (6) மாதகாலப் பயிற்சி முடிந்தவுடன் டிப்ளோமா சான்றிதழ் வழங்கப்படும். தங்குமிட வசதி, படிப்புக்குரிய உதவிகள் யாவும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. இப்பயிற்சிகளைப் பெற விரும்புவோர், கார்த்திகை மாதம் ஒராந் திகதிக்கு முன் கீழ்க் குறிப்பிட்ட விலாசத்திற்கு; தங்கள் பெயர்களையும், விலாசத்தையும் அனுப்பி வைக்கவும். விடுதியில் தங்கிப்படிக்க விரும்பும் மாணவர்கள், தத்தமது விடுதிக்கட்டணத்தை மாதம் மாதம் செலுத்த வேண்டும்.

### முக்கிய குறிப்பு.

1. பெயர்களை அனுப்பும் கடைசித் திகதி கார்த்திகை 1ம் திகதி.
2. பெயர்களை, சபைப்பெண்கள் ஐக்கியம் அல்லது சபைக் குரு சிபார்சு செய்து அனுப்பவும். (கூடியவரை கிறிஸ்தவ பிள்ளைகளை அனுப்பவும்).
3. அனுப்பும் மாணவிகளின் வயது 25 க்குக் குறைவாகவும் (G.C.E O/L) பரீட்சை எடுத்தவர்களாகவும் (சித்தி பெற்றவர்களும், பெறாதவர்களும்) இருக்க வேண்டும்.
4. குடும்ப வருமானம் பற்றிய விபரங்களை அனுப்பவும். குடும்பவருமானம் குறைந்தவர்கட்கு முதலிடமளிக்கப்படும்.
5. தெரிவு செய்யப்பட்ட மாணவியர் கார்த்திகை மாதம் 15 ஆம் திகதி காலை 8 மணிக்கு, பயிற்சி நிலையத்திற்குச் சமுகமளிக்க வேண்டும்.
6. பதிவுக் கட்டணம் ரூபா 200. கட்ட வேண்டும். பயிற்சி முடிந்தவுடன் பணம் திருப்பிக் கொடுக்கப்படும்.

**தொடர்புகொள்ள வேண்டிய விலாசம்**

திருமதி. A.R தம்பியப்பா,
ஆர்க் லேன்,
உடுவில், சுண்ணாகம்.

## திருமதி ராஜனி திரணகம.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உடற்கூற்றுத் துறைப் பேராசிரியர் கலாநிதி திருமதி இராஜனி திரணகம, சென்ற மாதம் 21 ஆம் திகதி இனந்தெரியாதோரினால் சுட்டுக் கொல்லப்பட்டார். இவருடைய படுகொலை, யாழ்ப்பாணத்து மக்கள் அனைவராலும் கண்டிக்கப்பட்டுள்ளது.

இந்தப் படுகொலையைச் செய்தவர் யார் என்பதுஇன்றுவரை புதிராகவே இருக்கிறது. இயக்கங்கள் யாவும் தமக்கும் இந்தக் கொலைக்கும் சம்பந்தமில்லை என்று கூறி விட்டன. யாழ்ப்பாணத்திலே இன்று காணப்படும் அவலநிலையை இந்தப் படுகொலை சுட்டிக்காட்டுகின்றது. இன்று யாழ்ப்பாணத்தில் யாரை வேண்டுமானாலும் யாரும் சுடலாம். பூனைக்கும் நாய்க்கும் இருக்கின்ற பாதுகாப்பே இன்று மனிதனுக்கு இருக்கின்றது

இராஜனி திரணகம அவர்கள் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த – வாழும் ஒரு சில மேதைகளில் ஒருவர். அவர் விரும்பியிருந்தால் அமெரிக்காவிலோ இங்கிலாந்திலோ சிறப்பான முறையில் வாழ்ந்திருக்கலாம். நான் இந்த மண்ணுக்குரியவள்! இங்கேயே எனது சேவை தொடரும் என்ற உறுதிப்பாட்டுடன் நமது நாட்டில் பணியாற்றினார். மாணவர்களினால் பெரிதும் விரும்பப்பட்டவர். தமக்குச் சரியெனப் பட்டதை ஒளிவு மறைவு இன்றிக் கூறுபவர். மக்கள் சேவையே மகேஸ்வரர் சேவை என்ற குறிக்கோளுடன் வாழ்ந்தவர். இத்தகைய சிறப்புக்கள் வாய்க்கப் பெற்றவர் நடுவீதியிலே வைத்து நாயைப்போலச் சுட்டுத்தள்ளப்பட்டிருக்கிறார். இது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும்.

இன்று நாம் எங்கே போய்க்கொண்டிருக்கின்றோம். ''இன்பம்'' என்ற சொல்லைக் கேட்டதுண்டு. அது எப்போதாவது எங்கள் வீட்டுப்பக்கம் வந்ததுண்டோ? என்ற நிலையிலே தமிழ் மக்கள் வாழ்கின்றனர். இந்தச் சகாப்தம் முழுவதுமே தமிழ் மக்களின் கதை கண்ணீர்க் கதையாக முடிந்து விட்டது. விடிவைப் பார்த்து ஏங்குகின்றான் தமிழன். தமிழ் மக்களுடைய நிலையைப் பார்க்கின்ற போது. நாலு வைத்தியரும் இனி நம்புதற்கில்லை என்றார், என்ற பாரதியாரின் அடிகளே ஞாபகத்திற்கு வருகின்றன.

எல்லா வைத்தியர்களுமே நமது நாட்டுக்குச் சிகிச்சை அளித்துப் பார்த்து விட்டனர். நோயாளியின் நிலைமை மோசமாகிக் கொண்டு வருகின்றதேயொழியத் திருந்துவதாக இல்லை.

இராஜனி திரணகம அவர்களின் படுகொலையைத் தொடர்ந்து, நமது நாட்டின் வேறு பல நல்லவர்களும் வல்லவர்களும் நாட்டை விட்டு வெளியேறலாம். வைத்திய சேவையும் கல்விச் சேவையும் பாதுகாப்புச் சேவையும் மேலும் சீரழியலாம். இந்த நிலையில் தமிழ் மக்கள் இலவு காத்த கிளிகள் போல ஆகிவிடுவர். இந்த நிலை மாற வேண்டுமானால், தமிழ் மக்களிடையே ஒற்றுமை ஏற்பட வேண்டும். வன்முறைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

''வாழும் உயிரினை வாங்கிவிடல்
இந்த வாழ்வினில் எவர்க்கும் எளிதாகும்.
வீழும் உயிரினை எழுப்புதற்கோ எந்த
வேந்தன் நினைகினும் ஆகாதையா.

## கிறிஸ்தவ குடும்பங்கள்.

குடும்ப வாழ்க்கை ஓர் சிறந்த அறமாகும். ஏனென்றால் குடும்ப வாழ்வைத் தவிர்த்து ஏனைய அற வாழ்க்கைகளில் வாழ்பவர்களுக்கும், இக்குடும்பவாழ்வினரே உயிர் நாடியாவர். தன் கணவனின் வருமானத்திற்கேற்ப வாழ்வு நடத்தும் மனைவி கணவனுக்கு ஏற்ற துணையியாவார். மனைவியில் அன்பு கொண்டு பிறரிடத்தில் பரிவும் கொண்டு அவர்களுடன் பகிர்ந்து வாழ்தலே குடும்ப வாழ்க்கைக்கு ஏற்ற சிறந்த பண்புகளாகும்.

குடும்பம் என்னும் கோவிலில் பிள்ளைகள் என்னும் செல்வங்கள் இருக்கும். அந்தப்பிள்ளைச் செல்வங்களை விடச் சிறந்த எதனையும் நாம் மதிப்பதில்லை. எனவே பிள்ளைச்செல்வங்கள் மட்டில் மிகவும் அக்கறையோடு இருத்தல்வேண்டும். தளர்நடை பழகும் காலத்திலும் மழலை மொழிபேசும் காலத்திலும் இனிய சொற்களால் பழக்கி, கல்வி கற்கும் காலத்தில் நல்ல கல்வியூட்டி, பல்கலைக்கழகம் வரையில் கல்விகற்கும் வகையில் தூண்டுதல் வேண்டும்.

குடும்பங்கள் தனித்துவாழ முடியாது. மற்றவர்களின் அன்பிற்கும் இடம்கொடுத்தல் வேண்டும். பகைவர் ஒருவர் தனக்குச்செய்த பாவத்தை மறப்பதற்கும், அன்புதான் காரணமாகும்.

'அன்பு' என்னும் பூவில் ஆயிரம் தேனீக்கள் வரும். அதுவே, குடும்பங்களில் அன்பு வழிவதைக் கண்டு இன்னொருவர் வந்தால் மனச்சந்தோசத்துடன் விரும்பி இனிதாகப் பார்த்து அவர்கள் அருகில் வந்ததும் மனப்பூர்வமாக இனிய சொற்களாற் பேசுவதிலேயே சிறப்பான அறம் குடும்பவாழ்வு என அறிய வரும்.

கணவன் தன் மனைவியோடு சேர்ந்து இல்லத்திலிருந்து சேர்க்கப்படும் பொருட்கள் எல்லாம் விருந்தினரைக்காக்கும் பொருட்டு அவன் செய்வானானால் அவனது வயலில் வித்தும் இடல்வேண்டியதில்லை ஏனென்றால் விருந்தினரை நல்ல முறையில் உண்பித்து மீதியைத் தான் உண்ணும் பழக்கம் கொண்டவனாயிருப்பதால், வந்த விருந்தினரைப் பேணிக்காத்து இனிவரப் போகும் விருந்தினரைக் காத்துக் கொண்டிருக்கும் இல்லறத்தான் தேவர்களுக்கும், சிறந்தவனாயிருந்து தேவர்களுக்கும், நல்விருந்தாளியாய் இருப்பான் என்று தெய்வப் புலவன் வள்ளுவப் பெருந்தகை கூறுகிறார்.

அடக்கம் என்னும் பண்பு குடும்பங்களில் சிறந்து விளங்க வேண்டிய ஒன்றாகும். குடும்பவாழ்க்கையை நடத்துபவன் தனது இல்வாழ்விலிருந்து வேறுபடாமல் அடக்கத்தால் சகித்து வாழ்பவன் மலையினும் மிகவும் பெரியதாகக் கணிக்கப்படும்.

குடும்பங்களே! குடும்ப உறுப்பினர்களே! சிந்தியுங்கள் ... செயற்படுங்கள் ... உங்களது வாழ்வே மேன்மை மிக்கது. இந்தக் கிறிஸ்தவ குடும்ப வாரத்திலே ஒவ்வொரு குடும்பமும், ஒற்றுமையாய் வாழ ஒன்றுபட்டு உழைக்க வேண்டும்.

ஜெயசீலன்.

## அளவெட்டித் திருச்சபையில் உயிர் மீட்சிக் கூட்டம்.

23-09-89 சனிக்கிழமை, முழுநாள் கூட்டமாக, இவ்வுயிர் மீட்சிக் கூட்டம் அளவெட்டித் திருச்சபையில் நடைபெற்றது. ''இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்' என்ற தூய பவுலின் வாசகம் அந்நாளுக்குரிய மையப் பொருளாக வைக்கப்பட்டது. அந்நாளின் ஆரம்ப ஆராதனை, காலை 9 மணிக்கு ஆரம்பமாகியது. அப்போது "நீ தேவனுடைய ராஜ்யத்துக்குத் தூரமானவனல்ல'' (மாற்கு 12:34) என்ற வார்த்தையின் அடிப்படையில் வண. ஐசக் செல்வரட்ணம் (பரி.யாக்கோபு.ஆலயம், நல்லூர்) அவர்கள், தேவனுடைய செய்தியைக் கூறினார்.

தொடர்ந்து நடைபெற்ற திருமறைப் பாடத்தையும், வண.செல்வரட்ணம் போதகர் அவர்கள் 'ஜெபம்' என்ற பொருளில் நடாத்தினார். அதனைத் தொடர்ந்து நடைபெற்ற கலந்துரையாடலில் வண. ஜெபநேசன் (மெதடிஸ்த திருச்சபை, வண்ணார்பண்ணை) அவர்கள் பங்குபற்றினார்கள். பின்பு, ''பிள்ளைகளை வளர்ப்பதில் பெற்றோரின் பங்கு'' என்ற பொருளில், திருமதி தம்பியப்பா (தெ. இ. தி) அவர்கள், சிற்றுரையாற்றியதோடு ஜெபவேளையையும் வழி நடாத்தினார். ஜெபவேளையின் போது, நாட்டின் சமாதானத்திற்காகவும், திருச்சபையின் வளர்ச்சிக்காகவும் இறைவனை வேண்டி, ஜெபங்களை ஏறெடுத்தனர் அங்கு பங்குபற்றிய அநேகர்.

ஐக்கிய மதிய போசனத்தைத் தொடர்ந்து, வண. ஜெபநேசன் அவர்கள், "யோனாவின் குமாரனாகிய சீமோனே நீ என்னை நேசிக்கின்றாயா'' (யோவா. 21:17) என்ற வசனத்தின் அடிப்படையில் தேவனுடைய செய்தியை வழங்கினார்.கிறிஸ்தவ வாழ்க்கையில் போலி எது? நிஜம் எது? எனக் காட்டிய இச் செய்தி,உண்மையில் உயிர் மீட்சியை ஏற்படுத்துவதாக அமைந்தது.

மாதர் சங்கத்தினரால் வழங்கப்பட்ட தேநீரைத் தொடர்ந்து, "மனம் மாறிய மைந்தன்'' என்ற நாட்டுக்கூத்தை இறையியல் கல்லூரி மாணவர்கள் நடித்துக் காண்பித்தனர்.

அன்றைய நாளுக்குரிய பாடல்களை, மாணவிகளும் பாடி, பாடல் நேரங்களைப் பயனுள்ளதாக்கினர். சண்டிலிப்பாய்த் திருச்சபையினரும் இக்கூட்டங்களிற் பங்கு கொண்டனர். இக்கூட்டங்களில் பங்கு பற்றிய அனைவருக்கும், இந்தநாள் மிகவும் பயனுள்ள ஒரு நாளாக அமைந்தது.

## கின்னஸ் தொடர்ச்சி.........

களுக்குள்ளாக, எலிசியின் மூத்த சகோதரன் ஹாரி 1981 இல் இறந்து போனதாகக் கண்டுபிடிக்கப்பட்டது. அதோடு இன்னுமொரு சகோதரன் வில்லியம்பில், கிளாக்டன் என்னுமிடத்தில் வாழ்ந்து வருவது கண்டுபிடிக்கப்பட்டது.

வில்லியத்தைச் சந்தித்து, அவரது சகோதரி எலிசி உயிருடன் இருந்து அவரைக்காண விரும்புகிறார்கள் என்று அறிவித்தபோது, ஆச்சரியத்தால் நிறைந்து போனார். அவர்களது பிரிவிற்குப் பின், எலிசிக்கு என்ன நடந்தது என வில்லியத்திற்குச் சொல்லப்படவில்லை.

சேனைத்தலைமையகத்திற்குக்கடிதம் எழுதிய இரண்டு வாரத்திற்குப்பின், சரித்திர பூர்வமான இந்தக் கூடிச் சேருகலுக்கு, தன் தாயை பிரையன் ஆஸ்போர்டு அழைத்துச் சென்றார்

## சிந்திக்க!

அரக்கரை அழிக்க அகல நிற்காதே.

பிழையை எதிர்க்க பின் நிற்காதே.

உரியதை உரியநேரத்தில் செய். அது உன்னை உயர்த்தவனுக்கும்.

பேச வேண்டும் என்பதற்காகப் பேசாதே, பேச வேண்டிய நேரத்தில் மட்டும் பேசு.

இலட்சியத்தை இழக்காதே. அது உப்பில்லாத கறிபோல் ஆகிவிடும்.

தாரத்தை மறந்தாலும் உன் தாயை ஒருபோதும் வெறுக்காதே.

## KEEPING ALIVE THE STUDY OF ENGLIH LITERATURE.

The Centenary of the death of Wilkie Collins, on September 23, 1989 was celebrated in Sri Lanka in a fitting manner when Professor A. J. Gunawardene, Director of the Institute of Aesthetic studies addressed an interested group on the life and work of the novelist in the British Council Hall on 23-9-89 at 5 p. m.

William Wilkie Collins (1829 — 1889) was the founder of the tradition of the detective novel in fiction of which his novel "moonstone" (1888) remains the famous mystery story in English fiction. "The Women in White" (1860) is another of his unsurpassed "thrillers". Willie Wilkins has never been excelled as a contriver of complicated plots in his novels. Often there is no crime, but only a mystery.

As a Victorian writer, the work of William Wilkie Collins has a vivid human interest. The detective in "Moonstone", Sergeant Cuff leaves memories that still linger in our minds.

One defect of the work of Willie Wilkins has been spotlighted by some critics - the abuse of the "machinery" not of detection but of "narration". We get diaries, memoirs, confessions etc. etc. "for the sake of verisimilitude" which really end in tedium. But whatever the shortcomings, Wilkie Collins was foremost among the novelists who poured out their novels during the latter half of the 19th century to satisfy the demands of a growing multitude of readers. It would greatly help our students if they could get the book "Moonstone" or "The Woman in White" from their school library and read them.

C. E. R.

## Alcoholism and Drug Abuse - the Churches' Responsibility

Alcoholism and drug abuse have been growing problems in our country during the past one to two decades. Similarly, these have been difficult problems to deal with in many other countries of the World too. Several surveys carried out in different parts of our country have pointed to the growing prevalence of abuse of alcohol and various types of drugs. There have been other indicators of the increased prevalence of alcohol and drug abuse too, for e.g. it has been shown that the number of alcoholics and drug addicts being treated in our psychiatric wards have been steeply increasing. Persons admitted with various physical complications of alcohol and other drug abuse, like cirrhosis of the liver have been on the increase too. A fairly high percentage of road accidents and fatalities related to such accidents has been alcohol related. One estimate has shown that a third of the drivers on our high-ways are under the influence of alcohol. Large number of crimes committed by individuals, like burglaries, assaults, rapes etc. are also committed after consumption of alcohol. Many of the growing number of suicides have been reported to be alcohol related. It is roughly estimated that there are more than 3 million alcoholics in our country. While there are no definite figures estimated for the prevalence of drug abuse, there is growing evidence to suggest that at least in our cities, the number of drug addicts have been alarmingly increasiug. Yet another pointer to the problem of alcohol in our country is the amount of alcohol produced. In 1985, 331 million litres of pure alcohol was used, for production of various brands of alcoholic beverages. Today, we have more than 200 brands of whisky, 50 brands of rum, 30 brands of brandy, 50 brands of beer 10 to 15 brands gin and wine, and over 100 varieties of country liquor being marketed all over the country. In addition, illicit distilling is also a growing industry.

**What is addiction / abuse / dependence?**

There are several substances like alcohol and different varieties of other drugs, which when consumed in certain quantities, influence people's thoughts, emotions, sleep, apetite, sexual functioning, social interaction and various other aspects of behaviour. These substances also give 'a sense of well being' (euphoria) when people are under their influence. Because of these effects, people who have used the substances several times, have a tendency to continuously use them. When such constant abuse occurs people can get addicted to or dependent on such substances. For a person to be called an addict or drug dependent, he should have an uncontrollable and strong desire (craving) to procure the drug, constantly and consume it. He would not be able to stop the drug taking without help and when stopped, would develop various kinds of physical and psychological withdrawal symptoms. A tendency to increase the dose of the drug abused (tolerance) is another indication of the person becoming dependent on the drug. The common psychological withdrawal symptoms are an irresistible craving for the drug, irritability, restlessness, feeling bored and disinterested, difficulty in concentration and work. The common physical withdrawal symptoms to various drugs are muscular aches and pains abdominal cramps, vomiting, diarrhoea, sweating, sleeplessness, running nose, tears, chills and fever and at times unfounded fears, confusion violent behaviour and fits. What are the usual substances which are abused?

— opiate type—derivatives of opium or synthetic opiates
— e.g. morphine, heroin, codein, methadone, pethedine etc.
— sedative drugs—e.g. alcohol, sleeping pills like barbiturates, mandrax, tranquilizers like, calmpose valium.
— stimulant drugs—amphetamines (dexedrin) and cocain
— cannabis—e.g. ganja, bhang, charas, hashish.
— hallucinogenic agents—L.S D., Mescalin, P.C.P. (phencylidine).
— volatile solvents / inhalants — petroleum products.
other drugs — tobacco, betel, coffee / tea.

The various methods of consuming the drugs are as follows:

eating, drinking, chewing, smoking, inhalation, snifting, nasal insufflation and various routes of injection like intra - muscular, intravenous etc.

**What are the consequences of alcohol / drug abuse?**

The consequences would be primarily dependent on 3 factors, namely, the type of drug abused, the personality of the user and the social situation of the user. However, the various consequences can be considered under the following heads:

— health — behaviour — family — work or occupation
— financial — police and law enforcing authorities.

(to be continued)

*At Rest :*

## The Revd. Celestine Fernando.

We regret to record the death of the Revd. Celestine Fernando a respected and revered priest of the Colombo Diocese on Thursday the 5th of October at his home in Colombo. Father Celestine as he was affectionately referred to by his hosts of friends was for many years Chaplain of the Ceylon University in Colombo. Later for 21 years he was General Secretary of the Ceylon Bible Society in which post he helped to transform the nature of the Bible Society itself as an agent of the Church's mission rather than being just a religious Book Shop. Even after his retirement from the Bible Society he continued to be associated with it as its President. Father Celestine was Editor of the Ceylon Churchman for many years until his death. His remains were kept in the Colombo Cathedral on Saturday, the 7th morning and the funeral took place the same day at 2-30 p. m. A fuller appreciation of Father Celestine will appear in a later issue of our paper.

### Statement...... continued

the various groups in the minority communities to abandon violent confrontation and negotiate a sharing of power within the democratic instituitional frame work.

The economic and social marginalisation of the general mass of the people has resulted from policies of 'development' which have left the poor poorer, with the most indigent decile of the population now receiving only 0.5 per cent of the national income.

Those specific causes have themselves been the result of the growth, under successive Governments, of policies and practices abhorrent to Democracy, namely, unprincipled pursuit of partisan goals greed for power, including excessive centralisation and reluctance to share it through devolution, and the exploitation of it to promote the selfish interests of Party and Party supporters, with callous neglect of minorities and of areas represented largely by Parties opposed to successive Governments. Bribery aud corruption have gone for the most part unchecked, with small fry netted while cunning or 'protected' sharks have got away.

Spiralling cost of living, unemployment and under-employment, with their attendant poverty, misery and desperation, have given rise to violent upheavels, briinging in their train widespread destruction of property, abductions, rape, maiming, shooting, killing, disruption of civil administration, transport, port and hospital services, education and commerce, and the imposition of a severe strain on resources at home and abroad.

The effects of the current situation of violence are especially disastrous for-

(a) the children, denied of their inalienable rights for education and an atmosphere of stability and security

(b) the young, denied opportunities for educationand employment, frustrated and liable to opt for violence themselves or to be press-ganged by violent groups

(c) the sick, especially those needing hopitalisation, but are denied the facility through stoppage of work by medical staff at various levels Even in times of war treatment of the sick is not suspended and all parties to domestic conflict should-as indeed, is recognised by United Nations Convention-ensure that medical attention is not denied, We appeal with all emphasis that these three most vulnerable groups should immediately have their situation amended,

( to be continued. )

Registered as a Newspaper at the G. P. O. Sri Lanka under No. Q/J/104/ News 89
Printed for the Jaffna Diocese of the Church of South India at American Ceylon Mission Press 182,1st Cross Street Jaffna on Friday 20 , October 1989 and published by The Rev. THEVANESAN, 182, First Cross Street, Jaffna